வட்டியில்லாக் கடன் என்றால், விவசாயிகள் தனியாரிடம் கடன் வாங்கி சிரமப்படக் கூடாது என்ற அடிப்படையில் 7 சதவிகித வட்டியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொள்கிறது. எனவே, அப்படிப்பட்ட விவசாயிகள், அவர்கள் செய்யக்கூடிய விவசாயத்திற்குத் தேவையான இயற்கை உரம் இன்றைக்கு நம்முடைய கூட்டுறவுத் துறையின் சார்பாக, TANFED மூலமாக எல்லா கிடங்குகளிலும் கிடைக்கிறது. எனவே, உரங்கள் வாங்கி, அவர்கள் உரிய விதைகளை வாங்கிப் பயிரிட்டால்தான் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நல்ல நோக்கத்தில் செய்யப்படுகிறது. இதில் தவறுகள் நடக்கக் கூடாது. உண்மையான விவசாயிகள் பயனடைய வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களின் அரசின் நோக்கம். இதில் எந்தவிதமான தவறும் இல்லை. உரங்கள் வாங்க வேண்டும் என்று சொல்வது, உண்மையான விவசாயிகள் அங்கே உரத்தை வாங்க வேண்டும். அவர்கள் வெளியேபோய் உரம் வாங்கினால் கலப்பட உரம்தான் இருக்கும். ஆனால், கூட்டுறவுத் துறைமூலம் விற்கப்படும் உரங்கள் கலப்படமற்ற உரங்கள். நல்ல தரமான உரங்கள் இங்கே விற்கப்படுகின்றன. இயற்கை உரங்களும் விற்கப்படுகின்றன. எனவே, விவசாயிகள் எந்த உரங்களைக் கேட்கிறார்களோ, அந்த உரங்களை கூட்டுறவுத் துறை இன்றைக்கு விற்பனை செய்யத் தயாராக இருக்கிறது. 1 இலட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் டன் உரங்கள் இருக்கின்றன. எனவே, இதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

உயர்மட்ட மேம்பாலம்

***3780—திரு. சு. ரவி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2019 ஜுலை 18]

அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சம்பத்துராயன்பேட்டை, இலுப்பை-தண்டலம் கல்லாற்றில் பிள்ளையார் கோயில் அருகில் நபார்டு திட்டத்தின் மூலமாக உயர்மட்ட மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சம்பத்துராயன்பேட்டை, இலுப்பை-தண்டலம் வரை கல்லாற்றின் குறுக்கே பிள்ளையார் கோயில் அருகே உயர்மட்டப் பாலம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 10—15

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதிகளைத் தகர்த்து, சதி வலைகளை அறுத்து, பல சாதனைகள் புரிந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எனது அரக்கோணம் தொகுதியில் நாடு சுதந்திரம் அடைந்து பாலங்கள் கட்டப்படாமல் இது நாள் வரையில் இருந்து வந்த நிலையில், சுமார் 20 கோடி ரூபாயில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக மூன்று பாலங்களையும், ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு பாலங்களையும், ஆக மொத்தம் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயில் 5 பாலங்களையும் கட்டிக்கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட சம்பத்துராயன்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிறுணமல்லி, நாகவேடு, பாடி, ஓச்சலம், அரும்பாக்கம் போன்ற கிராமங்களில் நெசவாளர் மக்கள், தொழிலாளர் தோழர்கள், மாணவ மாணவிகள், விவசாய பெருங்குடி மக்கள் ஆகியோர் அதிகமாக வசித்து வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் காஞ்சிபுரம், ஆட்டுப்பாக்கம் அரசு கலைக் கல்லூரி அல்லது சென்னைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் சம்பத்துராயன்பேட்டையிலிருந்து இலுப்பை—தண்டலம் வழியாகச் சென்றால் மிக விரைவாகச் செல்ல இயலும். இதற்கிடையே கல்லாறு செல்கிறது. அந்தக் கல்லாற்றில் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். நானும் தேர்தல் வாக்குறுதியாக கொடுத்திருக்கிறேன். தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுகிற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அந்தப் பாலத்தை கட்டித் தர பரிசீலனை செய்யப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை சொல்லியிருக்கிறார். எனவே, இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அனந்தாபுரம் உரியூர்குப்பம், உரியூர், அணைக்கட்டாப்புத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து கிட்டத்தட்ட பத்து கிலோ மீட்டர் தூரம், பேருந்து செல்லும் ஊரகச் சாலையாக இருக்கின்றது. அந்த ஊரகச் சாலையை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெமிலி ஊராட்சி ஒன்றியம், சம்பத்துராயன்பேட்டை—இலுப்பை—தண்டலம்—

பிள்ளையார்கோயில் வழியாக கல்லாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க 4 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் அமையவுள்ள இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால், ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் இப்பாலத்தை அமைக்க பொதுப் பணித் துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த உயர்மட்டப் பாலத்தை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் NABARD திட்டத்தின்கீழ் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டே கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். மேலும், இந்த உயர்மட்டப் பாலம் இலுப்பை, தண்டலம், சம்பத்துராயன்பேட்டை, சிறுணமல்லி, நாகவேடு, கீழாந்தூர் உள்ளிட்ட கிராமங்களை இணைக்கும் வகையில் அமைக்கப்படுவதால், சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் காஞ்சிபுரம் செல்வதற்கு 18 கிலோ மீட்டர் பயண தூரம் குறைவதோடு, 20 நிமிட நேரம் மிச்சமாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஊரகச் சாலையை, நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இப்போதே நாம் 7,000 கிலோ மீட்டர் நீள சாலைகளை ஒப்படைத்திருக்கிறோம். கண்டிப்பாக, அவசியம் இருந்தால், அதுவும் ஒப்படைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லாற்றில் மேம்பாலம் அமைக்கும் பணி இந்த ஆண்டே மாண்புமிகு முதலமைச்சரின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று கட்டித் தரப்படும் என்ற ஒரு நல்ல பதிலைச் சொன்ன மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலிருந்து தாராபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் மானூர் என்ற ஓர் ஊராட்சி இருக்கின்றது. அங்கு சுமார் 10,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். மானூரிலிருந்து வில்வாதம்பட்டி செல்கின்ற சாலையில் சண்முக நதி என்ற ஆறு உள்ளது. மானூரில் உள்ள மக்கள் தங்கள் விவசாய நிலத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அந்த ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். மழைக் காலங்களில் விவசாயிகள் தங்களின் நிலத்திற்குச் செல்வதற்கும், ஆடு, மாடுகளைக் கொண்டு செல்வதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். இரண்டு, மூன்று மாதங்களுக்குமேல் மழை பெய்கின்ற சமயங்களில் அந்த ஆற்றைக் கடக்க முடியாமல், விவசாய நிலங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. பழனி வந்து, புளியம்பட்டி வழியாக பத்து கிலோ மீட்டர் தூரம் உள்ள ஊரகச் சாலையைக் கடந்து தங்கள் விவசாய நிலத்திற்கு வர வேண்டியுள்ளது.*

முற்பகல் 10—20

எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளின் நலன்கருதி வில்வாதம்பட்டி–மானூருக்கிடையே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு இந்த ஆண்டே நிதியை ஒதுக்கித் தருவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள், வில்வாதம்பட்டி–மானூருக்கிடையே, சண்முக நதியின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்துள்ளார். அந்தப் பாலம் கட்டப்படுவதன்மூலம் பத்தாயிரம் மக்களும், விவசாயிகளும் பயன்பெறுவார்கள் என்பதால் அவர் இந்தக் கேள்வியைக் கேட்டுள்ளார்.*

2019 ஜூலை 18]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் 5 ஆண்டுகளில் மட்டும் 305 பாலங்களை 461 கோடி ரூபாய் செலவில் கட்டியுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 217 பாலங்கள், 347 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால்தான் ஊராட்சிகளில் அதிகமான அளவில் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள், அந்தப் பாலம் கண்டிப்பாக அவசியமாகத் தேவைப்படுகிறது என்றும், பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் இங்கே தெரிவித்துள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசென்று, கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் பிரதான சாலை, ஔவையார் நகர் மற்றும் ICF Canal Road, வில்லிவாக்கம் பகுதிகளுக்கிடையில் இரயில்வே இருப்புப் பாதைகள் செல்கின்றன. இந்த இரண்டு பகுதிகளையும் கடந்து செல்கின்ற மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். அங்கே விபத்துகளும் ஏற்படுகின்றன. பயண தூரமும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நான், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் இதுபற்றிய முழுமையான விவரங்களைக் கேட்டதில், இந்தப் பணி ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்தப் பணி துவங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தைத் தொடர்ந்து, அப்போது மத்திய இரயில்வே துறை அமைச்சராக பொறுப்பு வகித்த மாண்புமிகு திரு. சுரேஷ் பிரபு அவர்களுக்கு, விரைவாக இந்தப் பணியினை துவங்க வேண்டுமென்று, வலியுறுத்தி நானே இரண்டு முறை கடிதங்கள் அனுப்பி வைத்திருக்கிறேன். அவரும், இந்தப் பணி விரைவில் துவங்கப்படும் என்று எனக்கு பதில் கடிதத்தையும்

அனுப்பி வைத்திருந்தார். இதைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தப் பணி துவங்கப்பட்டது. நான், கொளத்தூர் பகுதிக்குச் செல்கிறபோதெல்லாம் இரயில்வே துறை அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகளை தொடர்ந்து என்னுடன் அழைத்துச் சென்றிருக்கிறேன். இதுவரை 12 முறை அங்கே சென்று நான் ஆய்வு மேற்கொண்டிருக்கிறேன். தற்போது, இரயில்வே துறையால் கட்டப்படுகின்ற இந்தப் பாலப் பணியானது இரண்டு மாதத்தில் முடிவடையப் போவதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. சென்னை மாநகராட்சி இதற்காக 58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. எனவே, இந்தப் பணி தொடர்பாக மாநகராட்சி சார்பில் கோரப்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம், 17–7–2019 அன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இரயில்வே துறையால் கட்டப்படுகின்ற மேம்பாலப் பணி இரண்டு மாதங்களில் முடிவடையக்கூடிய சூழ்நிலையில், நான், இந்த அரசையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டுமானப் பணிகளுக்கு இடம் கேட்பதற்கும், இரயில்வே துறைக்குச் சொந்தமான கட்டடத்தை இடித்துவிட்டு, சுற்றுச் சுவர் மற்றும் உள்வட்டச் சாலை அமைப்பதற்கும், இரயில்வே துறைக்கு தேவையான நிலம் 10 கோடியே 75 இலட்சம் ரூபாய் குத்தகைக்கு உடனடியாகச் செலுத்தி, மேலும், ஒப்பந்தப்புள்ளியை விரைவாக உறுதி செய்யவும், மேம்பாலப் பணியை போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இரயில்வே கடவுப் பாதைகளைக் கடந்து செல்கிறபோது பல விபத்துகளைத் தவிர்ப்பதற்கும், இந்தச் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலவக்கூடிய நெரிசலைக் குறைப்பதற்கும் இதுபோன்ற பாலப் பணிகள் நடைபெறுகின்ற அனைத்துப் பகுதிகளிலும் இரயில்வே துறை, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய மாநகராட்சி, பொதுப் பணித் துறை மற்றும் மின்சாரத் துறை உள்ளிட்ட துறைகள் சம்பந்தப்பட்ட ஒருங்கிணைந்த ஒரு குழுவை ஏற்படுத்தினால்தான் இந்தப் பணிகளை விரைவுபடுத்த முடியும். எனவே, அப்படி ஒரு குழுவை அமைத்து 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டத்தைக் கூட்டினால்தான் இதுபோன்ற இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைவாக முடிக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. எனவே, இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவருடைய கொளத்தூர் தொகுதியில் நடைபெறுகின்ற இரயில்வே மேம்பாலப் பணிகள் குறித்து குறிப்பிட்டு, அதனுடைய அவசியத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார். மேலும், இரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெறும் இடங்களில் சம்பந்தப்பட்ட துறைகளையெல்லாம் ஒரு குழுவாக அமைத்தால்தான் பணிகளை விரைவாக மேற்கொள்ள முடியும் என்றும் இங்கே கருத்து தெரிவித்தார். அது நல்ல கருத்துதான். அதுபோல, முன்னாள் மத்திய அமைச்சருக்கு இரண்டு முறை கடிதங்கள் எழுதியிருந்ததாகவும் அவர் இங்கே குறிப்பிட்டார். இரயில்வே துறைக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்காக சென்னை மாநகராட்சியால் ஒப்பந்தமும் கோரப்பட்டிருப்பதாகவும் அவரே இங்கே தெரிவித்திருக்கிறார். இரயில்வே துறைக்கு கட்ட வேண்டிய அந்த 10 கோடி ரூபாயை உடனடியாகச் செலுத்தி, கண்டிப்பாக, சென்னை மாநகராட்சி அந்தப் பணியை கூடிய விரைவில் வேகமாக முடித்துத்தர நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

சட்டக் கல்லூரி

***36617—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?